இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்டக் கற்கைகள் திணைக்களம்

இளங்கலை சட்டமாணி (சிறப்பு) பட்டப்படிப்பு திட்டம் - மட்டம் 03

இறுதிப் பரீட்சை – 2022/23

**LLU3303 – உரோமானியச் சட்டம்**

காலம் - மூன்று (03) மணித்தியாலங்கள்

---

திகதி: 29.02.2024 நேரம்: மு.ப.9.30 – பி.ப 12.30

---

மொத்த வினாக்களின் எண்ணிக்கை : 08

ஐந்து(05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்துக்கு பரீட்சாத்திகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

01. 'சட்டங்கள் எழுத்து வடிவில் இயற்றப்படும் போது சட்ட முறைமை வரலாறு ஒன்றில் ஒரு முக்கிய நிகழ்வு நிகழ்கின்றது: எழுதப்படாத வழக்காற்றுச் சட்டத்தில் மேலதிகமாக, தொலைநோக்கு விளைவுகளுடன் ஒரு புதிய சட்டத் தோற்றுவாய் வெளிப்படுகின்றது.'

    Mousourakis George, *Fundamentals of Roman Private Law(Springer 2012)*

    மேற்தரப்பட்ட கூற்றுடன் உரோமானியச் சட்டத்தின் எல்லையினை வளப்படுத்துவதற்கு பங்களித்த பல்வேறு தோற்றுவாய்களை விளக்குக.

    (20 புள்ளிகள்)

02. லூகாஸ் 55 வயதினையுடைய ரோமானியப் பிரஜை என்பதுடன் முறையே 14, 11 மற்றும் 09 வயதினையுடைய லொதாரியோ, ஜீலியஸ் மற்றும் சில்வியஸ் ஆகியோரின் தாதையதிகாரம் ( *pater familia* ) உடையவராவார். லூகாஸ் முகங்கொடுத்த பொருளாதார நெருக்கடியைக் கருத்திற் கொண்டு 11 வயதையுடைய ஜீலியாவை ஒக்டவியஸ் எனும் 40 வயதினையுடைய மனைவியை இழந்த செல்வந்தருக்கு திருமணம் செய்து கொடுத்தார். ஜீலியா திருமணம் செய்து இரண்டு மாதங்களின் பின்னர் ஒக்டவியஸ் கொடூரமானவன் என முறைப்பாடு செய்து தனது பெற்றோர் வீட்டிற்குத் திரும்பினாள். லூகாஸ் ஒலிவியா ஒக்டவியஸீடன் திரும்பிச் செல்லாவிட்டால் தான் அவளை அடிமையாக விற்றுவிடுவதாக அச்சுறுத்தினான். ஜீலியாவினுடைய சகோதரர்களான லொதாரியோ மற்றும் சில்வியஸ் ஆகியோர் தனது சகோதரியை

கொடூரமாக நடாத்தியமைக்காக ஒக்டவியஸை பழிவாங்கக் கருதி ஒக்டவியஸினுடைய பண்ணைக்கு தீ வைத்தனர். இதனால் லூகாஸ் , சில்வியஸ் மற்றும் லொதாரியோவினை போதிய உணவின்றியும் குளிர் காலத்தில் போதிய ஆடையின்றியும் வீட்டிற்கு வெளியே துரத்தி தண்டித்தான்.

ரோமானிய சட்டத்தின் தாதையதிகார நிறுவனத்திற்கு அமைவாக மேற்தரப்பட்ட நிகழ்விகலிருந்து எழும் சட்டரீதியான தாக்கங்களை ஆராய்க.

(20 புள்ளிகள்)

03. 'இறந்த நபரின் சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் அவரது அல்லது அவளது வாரிசுகளுக்கு எவ்வாறு கடத்தப்படுகின்றது என்பதையோ உரோமானிய வழியுரிமைச் சட்டம் குறிப்பிடுகின்றது.'

மேற்தரப்பட்ட கூற்றின் பிண்ணனியில், பிரயோகிக்கக் கூடிய சட்டக் கோட்பாடுகள் மற்றும் பொருத்தமான உதாரணங்களை வழங்குவதன் மூலம் உரோமானியச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு வகையான வழியுரிமையினை விவரிக்குக.

(20 புள்ளிகள்)

04. பின்வரும் சூழ்நலைகளில் பிரயோகிக்கக் கூடிய சட்டக் கோட்பாடுகளை ஆராய்க.

டைடஸ் ஒன்று கூடி வாழுதலை(*Conferratio*) பூர்த்தி செய்ததன் மூலம் அல்பாவுடன் *manus* திருமணம் செய்து கொண்டான். இத்திருமணத்தில் அவர்களுக்கு இரட்டை மகன்களும், ஒரு மகளும் காணப்பட்டனர். துரதிஷ்டவசமாக, இரட்டை மகன்கள் கடலில் மூழ்கியதுடன் தனது 10 வயதில் இறந்து போயினர். டைடஸ் தனது மகன்களின் இறப்பினால் உணர்வுபூர்வமாகப் பாதிக்கப்பட்டு சித்தசுவாதீனம் அற்றுப் போனான். இதற்கிடையில், அல்பா தனது 6 வயது மகளின் பாதுகாவலரான தன்னை நியமிக்க முயன்றாள். அல்பா மேலும் தனது காவலின் நிமிர்த்தமான சொத்துக்களிலிருந்து வருமானத்தை சேகரிக்கவும், அத்தகைய வருமானத்தை தனது விருப்பப்படி முதலிடு செய்யவும் உரிமை உண்டு என நம்பினாள்.

(20 புள்ளிகள்)

05. பின்வரும் சூழ்நிலைகளில் பிரயோகிக்கப்படக் கூடிய உரோமானியச் சட்டக் கோட்பாடுகளை பகுப்பாய்வு செய்க.

(a). புதிதாக திருமணமான ஜீனோ மற்றும் எட்கா தம்பதியினர் எட்காவுக்கு அவளது தந்தை வழங்கிய நிலத்தில் ஒரு சிறிய வீட்டைக் கட்ட முடிவு செய்தனர். ஜீனோவின் சகோதரர் புளூட்டோ, வீட்டின் சுவர்களைக் கட்ட ஒரு சுமை செங்கல் மற்றும் மணலை அனுப்பி வைத்தார். இதற்கிடையில், மார்கஸின் நிலத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த செங்கற்கள் மற்றும் மணலை புளூட்டோ திருடிவிட்டதாக அயலவரான மார்கஸ் முறையிட்டார். ஜீனோவும் எட்காவும் மார்கஸ் இந்தப் பிரச்சினையைப் பற்றி முறைப்பாடு செய்தபோது, வீட்டின் சுவர்களை கட்டியெழுப்பியிருந்ததால் இது குறித்து சங்கடம் அடைந்தனர்.

(b). அந்தோனியவுக்குச் சொந்தமான காணியை ரொமியுலஸ் ஆக்கிரமித்து இருந்தான். அந்தோனியா ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, ரொமியுலஸை காணியிலிருந்து வெளியேற்றி அதனை மீண்டும் கைப்பற்றினான். இருப்பினும், ரொமியுலஸ் ஆறு மாதங்களுக்குப் பிறகு அன்தோனியாவை வலுக்கட்டாயமாக அகற்றி, அவன் நிலத்தின் மீது ஆட்சியுரிமையைக் கொண்டிருப்பதாகக் கூறி நிலத்தில் கோதுமை மற்றும் பார்லியினை பயிரிட்டான்.

(10 × 2 = 20 புள்ளிகள்)

06.

(a). கிளீடஸ் மற்றும் அவரது குடும்பத்தினர் மசிடோனியாவிற்கு புனித யாத்திரை சென்றனர். அவர்கள் சென்றிருந்த போது, அவர்களது வீடு தீப்பிடித்தது. கிளீடஸின் பக்கத்து வீட்டுக்காரர் உர்பானோ அவரது மகன்களின் உதவியுடன் தீயை அணைத்தார். கிளீடஸின் அடிமை தீயினால் கடுமையாக காயம் அடைந்ததுடன், சிகிச்சை பெறுவதற்கான செலவுகளை உர்பானோ செலுத்தினார். உர்பனோ மேலதிக சேதமடைவதைத் தடுக்க கிளீடஸின் வீட்டில் இருந்த கோதுமையை சேமித்து வைக்கும் ஒரு வசதியினையும் செய்திருந்தார்.

மேற்தரப்பட்ட நிகழ்வுடன் தொடர்புடைய சட்ட விளைவுகள் குறித்து கிளீடஸ் மற்றும் உர்பனோ ஆகியோருக்கு ஆலோசனை வழங்குக.

(b). 'உரோமானிய சட்டத்தின் கீழ் ஒருமித்த ஒப்பந்தங்கள்(consensual contracts) உருவமற்றவை என்பதுடன் வெறுமனே இருதரப்பு கடப்பாடுகளை உருவாக்கும் உடன்படிக்கையாகும்.'

பொருத்தமான உதாரணங்களை மேற்கோள் காட்டி உரோமானிய சட்டத்தின் கீழ் ஒருமித்த ஒப்பந்தங்களின் தன்மையினை ஆராய்க.

(10 × 2 = 20 புள்ளிகள்)

07. பின்வரும் சூழ்நிலைகளில் ஏற்புடையதாகக் கூடிய உரோமானிய சட்டக் கோட்பாடுகளை பகுப்பாய்வு செய்க.

(a). சைரஸ், பீளிக்ஸின் வீட்டில் இரவில் நுழைந்து தங்கத்தால் செய்யப்பட்ட சில அலங்காரப் பாத்திரங்களை திருடினான். சைரஸ் திருடப்பட்ட பொருட்களுடன் தப்பிக்க முயன்றபோது, பீளிக்ஸ் தனது அடிமையான பால்பஸின் உதவியுடன் அவனைப் பிடித்தான்.

(06 புள்ளிகள்)

(b). அதிக அளவு கோதுமை சேமித்து வைக்கப்பட்டிருந்த ஹட்ரியனின் கடைக்கு ஜீலியஸ் தீ வைத்தான். ஏனெனில் ஹட்ரியன் அப்பாவி விவசாயிகளை அச்சுறுத்தி, மொத்த கோதுமையை நியாயமற்ற வகையில் சேகரித்ததால் தான் இதைச் செய்ததாகக் கூறி, ஜீலியஸ் தனது செயலை நியாயப்படுத்த முயன்றார்.

(07 புள்ளிகள்)

(c). அதிக அளவு மதுவை உட்கொண்டதால் போதையில் இருந்த கெமிலியஸ் ஒரு பொதுக் கூட்டத்தில் செனட்டரான சிசரோவை அவமானப்படுத்தினான். சிசரோ , கெமிலியஸீனைக் கட்டுப்படுத்த முயன்றபோது, சிசரோவின் தாய் ஒரு விபச்சாரி என்று கூறி அவன் சிசரோவின் மீது உமிழ்நீரை துப்பினார்.

(07 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றின் மீது விரிவான குறிப்புககளை எழுதுக.

a) ஆரம்ப காலம் மற்றும் உரோமானியச் சட்டத்தை வளர்ப்பதில் அதன் முக்கியத்துவம்

b) உரோமானியச் சட்ட நடைமுறை மற்றும் பீரீட்டர்களின் பரிகாரங்கள்

(10 × 2 = 20 புள்ளிகள்)

*-பதிப்புரிமை பெற்றது-*